# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 40 /2018**

திரு. ஆர். குப்பன்,
த/பெ ரத்தினம்,
எண்.148, முசிறி கிராம்,
பாகவெளி அஞ்சல் 632 508,
வேலூர் மாவட்டம் . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு மெயின் ரோடு,
காந்தி நகர், வேலூர்–632 006. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 29.10.2018**

1. திரு. ஆர். குப்பன், த/பெ ரத்தினம், எண்.148, முசிறி கிராம், பாகவெளி அஞ்சல் 632 508, வேலூர் மாவட்டம்அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண்.40/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரின் வீட்டு மின்இணைப்பாக உள்ள S.C.No.243–012–096ஐ வணிக மின் இணைப்பாக மாற்றக் கோரி வாலாஜா நகர இளநிலைப் பொறியாளர் அவர்களுக்கு கடிதம் கொடுத்து ஐந்து மாதங்கள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் 2.7.2018இல் தலைவர் வேலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தனது

முறையீட்டை சமர்ப்பித்தார். மன்ற உறுப்பினர் பதவி காலியாக உள்ளதால் விசாரணை நாள் பின்னர் தெரிவிக்கப்படும் என பதில் கூறியதால் தனது மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 27.8.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரான மேற்பார்வை பொறியாளர்/வேலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தனது 12.10.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்குறிப்பிட்ட இம்மின்னிணைப்பு வீட்டு உபயோக மின் கட்டணமாகவே மின் இணைப்பு வழஙகப்பட்ட தேதியிலிருந்து செலுத்தப்பட்டு வருவதாகவும், கடந்த 29.1.2018 அன்று வருவாய் மேற்பார்வையாளர்/இ.ப/நகரம்/வாலாஜா அவர்களின் வழக்கமான தாழ்வழுத்த மின் இணைப்புகளின் ஆய்வின்போது மேற்குறிப்பிட்ட வீட்டு உபயோகத்திற்காக வழஙகப்பட்ட மின் இணைப்பு அக்கட்டிடத்திற்குள் ஒரு அறையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் நியாய விலைக்கடைக்கு வணிக உபயோகமாக பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மேற்படி வீதப்பட்டியல் மாற்று உபயோகத்திற்கான ஏற்கனவே செலுத்தப்பட்ட வீட்டு மின் பயன்பாட்டு கட்டணத்திற்கு கூடுதலாக ரூ.4903/– செலுத்த கடந்த 29.1.2018 ஆம் தேதியில் அறிவுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். விடுபட்ட கூடுதல் கட்டணம் செலுத்தாததால் கடந்த 3.8.2018 அன்று இம்மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்யப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர் திரு. குப்பன் அவர்கள் உதவி பொறியாளர்/நகரம்/வாலாஜா அவர்களை அலுவலகத்தில் சந்தித்து இது குறித்து கேட்டபோது அந்த மின்இணைப்பிலிருந்து வணிக உபயோகத்திற்காக பயன்படுத்தியதற்கான விடுபட்ட கூடுதல் கட்டணம் ரூ.4903/–

செலுத்தப்படாததால் இம்மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்யப்பட்டது எனவும் மேற்கூறப்பட்ட விடுபட்ட கூடுதல் கட்டணத்தை செலுத்தும்பட்சத்தில் மறுஇணைப்பு உடனடியாக வழஙகப்படும் என்று உதவி பொறியாளர்/நகரம்/வாலாஜா அவர்களால் மனுதாரரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

6. விடுபட்ட கூடுதல் கட்டணம் ரூ.4903/—ஐ (WITH BPSC) 15.10.2018 அன்று (ரசீது எண்.VIR243AR5S712) செலுத்தப்பட்டதின் அடிப்படையில் மறு இணைப்பு வழஙகப்பட்டு விகிதப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டது (IA TO V) என்பதனை எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 15.10.2018 நாளிட்ட இளநிலை பொறியாளர்/நகரம்/வாலாஜா அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தன்னுடைய (மனு எண்.40/2018) மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக கடிதம் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ அய்யா*

*நான் என்னுடைய மின் இ.எண்.**243–012–96** சம்பந்தமாக வாலாஜா O/M மற்றும் JE, வேலூர் CGRF சென்னை மின் குறைதீர்ப்பாளர் மையம் ஆகிய அலுவலகஙகளுக்கு மேற்கண்ட இணைப்பு எண் கொண்ட சர்வீசுக்கு அளித்த புகாரை வாபஸ் பெற்றுக்கொண்டு, ஏற்கனவே கட்ட வேண்டிய மின் பாக்கியை செலுத்திவிடுகிறேன். மேலும், இன்று **15.10.2018** முதல் வீட்டு இணைப்பை வணிக இணைப்பாக மாற்றி விடுகிறேன் என தஙகளுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்*

*இப்படிக்கு*
*Sd / xx xxx xxxxxxxxxx*
*(R. குப்பன்) ”*

6. மேல்முறையீட்டாளர், தனது 15.10.2018 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால்

மேல்முறையீட்டு மனு எண்.40/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. ஆர். குப்பன்,
த/பெ ரத்தினம்,
எண்.148, முசிறி கிராம்,
பாகவெளி அஞ்சல் 632 508,
வேலூர் மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு மெயின் ரோடு,
காந்தி நகர், வேலூர்–632 006.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.